THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 29 October 2016 Issue - 10

ஆசிரியர் உரை

# "...சீடர்களெல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள் "

ஒரு தலைமையின் கீழோ, ஒரு கொள்கையின் மீதோ, ஓர் இயக்கத்தின் பேரிலோ அல்லது ஒரு நம்பிக்கையின் முறைமையிலோ தங்களை ஈடுபடுத்தியிருப்பவர்கள், காலப்போக்கில் ஏதாவதொரு காரணத்தினிமித் தம் அந்தத் தலைமையின் கீழிலிருந்தோ, அதன் கொள்கை பிடிப்பிலிருந்தோ, அவ்வியக்கப் பற்றிலிருந்தோ அல்லது அந்த நம்பிக்கையின் முறையிலிருந்தோ, தங்களை விடுவித்துக் கொள்வது, ஏதோ நம்முடைய நாட்களில் மட்டும் நடக்கும் விபரீதம் என்று நாம் எண்ணிவிடக் கூடாது. காலம் தொட்டே இப்படித்தான் இருந்து வருகிறது. சமுதாயமும் இதைச் சிரமமில்லாமல் ஏற்று சீரணித்துக் கொள்கிறது. ஆயினும், இப்படி விடுவித்துக் கொள்ளும் எல்லோருக்கும் சமுதாயம் ஒரே விதமான விமர்சனத்தையோ அல்லது அர்ச்சனையையோ வழங்குவதில்லை. ஆம், அவர்கள் தங்கள் தலைமையை மாற்றிக் கொண்டார்கள் என்றும், கொள்கையிலிருந்து விலகிவிட்டார்கள் என்றும், இயக்கத்தைக் கைவிட்டார்கள் என்றும், நம்பிக்கையிலிருந்து பின் வாங்கிவிட்டார்கள் என்றும் அதன் தன்மைக் கேற்பவும், சம்பந்தப்பட்டவர்களின் தகுதிக்கேற்பவும் சாடப்படுவார்கள். இதை நாம் ஓரளவு தெரிந்துதான் வைத்திருக்கிறோம்.

இப்படி விமர்சனங்களுக்கு உள்ளாகுபவர்களை விதவிதமான வார்த்தைகளைக் கொண்டு விமர்சிக்கத் தயங்காத சமுதாயம், ஒருவன் ஓடி விட்டான் அல்லது அவர்கள் ஓடிவிட்டார்கள் என்ற சொற்றொடரை மாத்திரம் சட்டென எடுத்து விட்டுவிடாமல், மிகக் கவனமாகவே கையாளுகிறது. இதை

ஒரு கடுமையான விமர்சனமெனக் கருதி, எல்லா சந்தர்ப்பத்திலும் பயன் படுத்தாமல், எக்கச்சக்கமான சூழ்நிலை நேரிடும் போது மாத்திரம் சங்கடத் தோடும், கோபத்தோடும் பயன்படுத்துகிறது. அதாவது, ஒருவன் செய்யத் தகாத செயலைச் செய்யும் போது வேறு வழியின்றி பயன்படுத்துகிறது. உதாரணமாக, ஓர் அசிங்கமான செயலைச் செய்ததினிமித்தம் தாக்குப் பிடிக்க முடியாமல் இடம் விட்டு வெளியேறுபவனை, " ஊரை விட்டு ஓடி விட்டான் " என்று சொல்லுகிறது. இன்னும், ஒருவன் ஒழுக்கமாக இருந்து, முறையாகப் பெண் கேட்டு, முழுச் சம்மதத்தோடு ஊரறிய ஒரு பெண் ணைக் கரம் பிடிக்காமல், இரண்டு பேருமாகக் கிளம்பிவிட்டால், " அவர்கள் ஓடிவிட்டார்கள் " என்று கோபம் கொப்பளிக்கச் சொல்லும். மொத்தத்தில் "ஒருவன் ஓடிவிட்டான் " அல்லது " அவர்கள் ஓடிப்போனார்கள் " என்பது நல்ல ஒரு சூழ்நிலைக்காகவோ அல்லது சரியான ஒரு செயலுக்காகவோ பயன்படுத்தப்படுவது இல்லை.

சரி, இப்படி சமுதாயத்தால், காரணகாரியத்தோடு கவனமாகப் பயன் படுத்தப்பட்டு வரும் ஓடிப்போனார்கள் என்ற சொற்றொடரை, " ... அப் பொழுது, சீஷர்களெல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள் " (மத். 26 : 56) என்று இயேசுவின் சீடர்களுடைய செயலுக்காக ஆவியானவர் பயன் படுத்தியிருப்பது, இவர்களின் செயலை நாம் இலேசாக எடுத்துக் கொள்ளக் கூடாதென்பதையே காட்டுகிறது. இந்த இடத்தில் சீடர்கள் செய்தது முற்றி லும் தவறாக இருந்தபடியால் தான், ஆவியானவரின் சுடு சொல்லுக்கு இவர்கள் இலக்காயிருக்கிறார்கள். எந்தச் சூழ்நிலையிலும் அவர்கள் இயே சுவை விட்டுப் போயிருந்திருக்கவே கூடாது என்பது தான் ஆவியானவரின் வாதமாக உள்ளது. " வேத வாக்கியம் நிறைவேற வேண்டியது அவசியமா யிருக்கிறதே " என்று உங்களில் சிலர் இங்கே முணுமுணுப்பது என் காதில் விழுகிறது. ஏன், அது ஆவியானவருக்குத் தெரியாதா? சரி, உங்கள் எண்ணப்படியே பார்த்தாலும், வேதவாக்கியம் நிறைவேறட்டுமென்றா சீடர்கள் ஓடினார்கள்? இல்லை, இல்லை, இல்லை.

ஒருவேளை, இயேசுவின் சீடர்களுக்கு வக்காலத்து வாங்க நினைத் தால், இங்கே சற்று கவனியுங்கள். யோவான்ஸ்நானகன் என்ற பயமறியா பக்திமானை நாம் அறிவோம். இயேசுவுக்கு முன்னோடியாகவும், அவ ருக்கு " வழியை ஆயத்தப்படுத்தவும் " வந்து, சபையாகிய பரலோக ராஜ்யம் (மத். 16 : 18 , 19) சமீபத்திருக்கிறதென்று கூவி கூவிப் பிரசங்கம் செய்தார். அவருக்கும் சீடர்கள் இருந்தார்கள் (யோவா 1 :35). ஆனால் அந்தச் சீடர் களின் செயல்பாட்டுக்கு அருகில் நிற்கக் கூட நாங்கள் அருகதை அற்ற வர்கள் என்பதை இயேசுவின் சீடர்கள் தங்கள் செயலால் நிரூபித்திருப்பது

உங்களுக்குத் தெரியுமா? எப்படியெனில், அந்நாட்களில் ஆட்சிக் கட்டிலி ருந்த ஏரோதுவின் விபச்சார குற்றத்தை முகமுகமாய்க் கண்டித்தததி னிமித்தம் சிறையில், அடைக்கப்பட்டான் யோவான் (மத் 4 : 12, மத் 14: 3). அதாவது, அவனைக் கைது செய்து, பிறகு காவலில், வைத்தார்கள். பிறகு, எந்த ஒரு விசாரணையும் இல்லாமல், ஓர் அரக்கியின் சதியால் (மத் 14 : 6 – 10) சிரச்சேதம் பண்ணப்பட்டான். ஆனாலும், அவனுடைய சீடர்கள் ஓடிப் போனார்களென்று வேதம் கூறுவதில்லை. ஆம், யோவான் காரண மின்றிக் கைது செய்யப் பட்டான். சீடர்கள் ஓடவில்லை. யோவான் அநியாய மாய்க் காவலில் வைக்கப்பட்டான். சீடர்கள் ஓட வில்லை. சதி செய்து கொலை செய்யப்பட்டான். அப்பொழுதும் சீடர்கள் ஓட வில்லை. இத்த னைக்கும் யோவான், தான் உயிரோடெழுந்திருப்பேன் என்றெல்லாம் எதுவும் பிரசங்கிக்கவில்லை.

இப்படி இவர்கள் ஓடிப்போகாதது மாத்திரமல்ல, யோவான் மரித்து, மரித்த இடத்தில், புல்லும், செடியும், மரமும், உண்டான பிறகும், யோவா னுக்காக வாழ்ந்திருக்கிறார்கள்! அதெப்படி என்கிறீர்களா? நியாயமான கேள்விதான். ஆனால், கவனியுங்கள். பெந்தேகொஸ்தே நாளில் சபை ஆரம்பிக்கப்பட்டு, பல ஆண்டுகள் கழித்துத் தான் பவுலடியார் மனம் மாறி னார் (அப். 9 அதி ). அதன்பிறகு அவர், முன்று நற்செய்திப் பயணங்கள் மேற்கொண்டார் (அப். 13 – 14 அதி ; 15 : 39 – 18 : 22 ; 18 : 23 – 21 : 16) அப்படி மேற்கொண்ட மூன்றாவது பயணத்தின்போது, எபேசு பட்டணத் துக்கு வந்தார் (அப் 19 : 1). அங்கே வந்த போது, சிலர், தாங்கள் யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இவர் களின் இந்தக் கூற்றிலிருந்து நமக்கு இரண்டு காரியங்கள் தெரிகிறது. ஒன்று, இவர்கள் யோவானாலே ஞானஸ்நானம் பெற்று இன்னும் அதில் உறுதியாக இருந்துள்ளார்கள் அல்லது யோவானின் சீடர்கள் தொடர்ந்து ஞானஸ்நானம் கொடுத்து வந்துள்ளார்கள். இதில் எது உண்மையாக இருந்தாலும், யோவானைப் பின்பற்றியவர்களின் உள்ள உறுதி நம்மை வியக்க வைக்கிறது!

ஆனால், இயேசுவின் சீடர்கள்? ஓடிவிட்டார்கள்! அதுவும் எல்லாரும் ஓடிவிட்டார்கள்!!! எப்பொழுது? அவர் கைது செய்யப்பட்ட போது. (மத் 26 : 54, 26 ) அவரை இன்னும் காவலில் வைக்கவுமில்லை. சிலுவையில் அறையவுமில்லை. அந்நாளில் ஓடிப்போன சீடர்களுக்கு, அவர் கைது செய்யப்பட்டதே போதுமானதாக இருந்துள்ளது. எங்கே போய் முட்டிக் கொள்வதென்று தெரியவில்லை.

பேர் சொல்லி தன்னாலே அழைக்கப்பட்டு, ஏற்ற இறக்கங்களில் அர

வணைக்கப்பட்டு, எல்லாவற்றாலும் போதிக்கப்பட்டு, ஆவியிலும், சரீரத்திலும் போஷிக்கப்பட்ட இவர்களில் ஒருவர் கூட நில்லாமல், ஒட்டுமொத்தமாக ஓடிப்போனது இயேசு ஆண்டவருக்கு எப்படியிருந்திருக்குமென்று எண்ணிப்பாருங்கள்! நினைத்தாலே நெஞ்சமெல்லாம் பதறுகிறது. எப்படித்தான் இயேசு ஆண்டவர் பொறுத்துக் கொண்டாரோ?! நூறு பேர் உள்ள சபையில், ஒரு பத்துப்பேர் கலைந்தோ, தொலைந்தோ போனாலே, நித்திரைக்கு விடுமுறையாகி விடுகிறது. இத்தனைக்கும் அவர்களுக்கு பிரசங்கிப்பதைத் தவிர வேறு எதுவும் பெரிதாகச் செய்திருக்கமாட்டோம். ஒரு பத்து சதவீதத்திற்கே இப்படியென்றால், நூறு சதவீதமும் அம்பேலானால், அதாவது 12 பேரைத் தெரிந்தெடுத்து வளர்த்து, அந்தப் 12 -ம் போய்விட்டால்?! ஆனால், அதையும் நம் இயேசு பொறுத்துக் கொண்டார். ஆம், அவர் தான் நம் இயேசு. ஆம், அவரேதான். அவருக்கு ஈடுஇணை அவர்தான்.

இதிலே வேடிக்கை என்னவென்றால், இவர்கள் இப்படி ஓடிப்போவார்கள் என்பது இயேசுவுக்கு முன்னமே தெரிந்திருந்தது. பழைய ஏற்பாட்டு வசனங்களில் அத்துபடியாக இருந்த இயேசுவானவர், தீர்க்க தரிசனங்களில் “ எவரெஸ்ட் ” என்ற பெருமைக்குரிய ஏசாயா 53 -ம் அதிகாரத்தை நன்றாக அறிந்திருப்பார். அதில், “ ... அவரை விட்டு நம்முடைய முகங்களை மறைத்துக் கொண்டோம் ” (ஏசா 53 : 3) என்றுள்ளது. அந்தத் தீர்க்கதரிசனம் தான் அந்நாளிலே நிறைவேறிற்று.

சரி, இயேசுவின் சீடர்கள் ஓடிப்போனார்கள், ஓடிப்போனார்கள் என்றே நாம் பேசி நேரத்தைக் கழிக்காமல், அவர்கள் ஓடிப்போனதற்கான காரணங்கள் என்ன என்று கண்டுபிடித்து, அதிலிருந்து நமக்கு என்ன பாடங்கள் கிடைக்கிறதென்று தெரிந்து கொள்ள முயற்சிப்போம்.

### I தவறான எதிர்பார்ப்பால் ஓடிப்போனார்கள்

ஆண்டவர் இயேசுவைப் பின்பற்றுவதிலிருந்து, சீடர்கள் ஓடிப்போனதற்கான முதலாவது காரணமாக, இயேசுவிடம் அவர்களுக்கிருந்த தவறான எதிர்பார்ப்பைக் கூறலாம்.

எல்லாவற்றையும் விட்டு உம்மைப் பின்பற்றினோமே ( மத் 19 : 27 ) என்று சொன்ன சீடர்களை எப்படி இப்படிக் குற்றம் சாட்டலாம் என்று நீங்கள் நினைப்பது எனக்கு விளங்காமலில்லை. நானும் இங்கே இயேசுவின் சீடர்களுக்கு ஆவியின் சிந்தையே இருக்கவில்லை என்று சொல்ல முற்படவில்லை. சீடர்களுக்கு ஆவியின் சிந்தை இருக்கவே செய்தது. எப்படி

யெனில், ஒரு சமயம் இயேசுவைப் பின்பற்றி வந்த திரளான கூட்டம், " ... இது கடினமான உபதேசம் யார் இதைக் கேட்பார்கள் என்று சொன்னதோடு " (யோவா 6 : 6) " அவருடனே கூட நடவாமல், பின்வாங்கியும் போனது " (6 : 66) . அப்பொழுது இயேசு எஞ்சியிருந்த 12 பேரையும் பார்த்து, " நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ " என்று கேட்டார். ( யோவா 6 : 67 ) அதற்கு அவர்கள், " யாரிடத்தில் போவோம் நித்திய ஜீவ வசனங்கள் உம் மிடத்தில் உண்டே " என்றார்கள் (யோவா 6 : 68) . ஆகவே, எவ்வித சந்தேக முமில்லாமல் சீடர்களுக்கு ஆவியின் சிந்தை இருக்கவே செய்தது.

ஆனால், ஆவியின் சிந்தையினூடே அவர்களுக்கு மாம்ச சிந்தையும் இருந்துள்ளதென்பதை நாம் கவனிக்கத் தவறக்கூடாது. இன்றைக்கு எப்படி அநேகர் இயேசு பூமிக்குரிய ராஜ்யத்தை மீண்டும் ஏற்படுத்துவார் என்று எந்தவொரு முகாந்திரமுமில்லாமல், வசனங்களின் உபதேசத்திற்கு மாறாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்களோ அதுபோல, இயேசுவின் போதனைகளுக்கு எதிராக, பூமிக்குரிய ராஜ்யம் பற்றிய சிந்தை அவர்களுக் குள்ளாக இருந்து கொண்டே இருந்தது. இயேசுவின் ஊழிய நாட்களில் ஒரு சமயம், செபதேயுவின் குமாரர்களும், இயேசுவுக்கு நெருக்கமாக இருந்த வர்களுமென்று நம்மால் அறியப்பட்டிருக்கிறவர்களுமாகிய யாக்கோபும், யோவானும், **உமது மகிமையிலே, எங்களில் ஒருவன் உமது வலது பக்கத்திலும், ஒருவன் உமது இடது பக்கத்திலும் உட்கார்ந்திருக்கும்படி எங்களுக்கு அருள் செய்ய வேண்டும்** என்றார்கள். ( மாற் 10 : 35 -37 ). இவர்களின் இந்தக் கண்ணோட்டம் தவறு என்பதைத் தொடர்ந்து வந்த வசனங்களில் இயேசு சுட்டிக்காட்டினார்.

சீடர்களின் இந்த பூமிக்குரிய சிந்தையும், அதைத் தொட்டு வந்த தவறான நினைப்பும், அவர் உயிரோடெழுந்த பிறகும் தொடர்ந்திருக் கிறதென்பதை நாம் கவனித்தால், அவர்கள் எந்தளவு அச்சிந்தையால் அலைக்கழிக்கப்பட்டிருந்தார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். ஆம், அவர் உயிரோடே எழுந்து 40 நாட்களுக்கு அவர்களோடே சஞ்சரித்து, பரலோகத்திற்கு ஏறிப்போகும் நாளும், அந்த நேரமும் வந்த போது கூட, ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்? என்று கேட்டுள்ளார்கள் ( அப் 1 : 6 ) . பூமிக்குரிய ராஜ்யத்தின் சிந்தை அவர்களை எந்தளவு பாதித்திருந்ததென்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை. ஆக, சீடர்கள் ஓடிப் போனதற்கான காரணங்களில் கண்டிப்பாக நாம் இதைக் கூற முடியும்.

இதை வாசிக்கும் அருமையானவர்களே, இயேசுவைப் பின்பற்று

கிறோம் என்று சொல்லுகிற நமக்குள்ளே எப்படிப்பட்ட சிந்தை இருக்கிறது? இயேசு வலியுறுத்தும் பரத்துக்கடுத்த ஆன்மீக சிந்தை இருக்கிறதா அல்லது அந்நாட்களில் சீடர்கள் கொண்டிருந்த, மாம்சீக சிந்தையோடு இரண்டறக் கலந்திருந்த ஆன்மீக சிந்தை இருக்கிறதா? சொல்லுங்கள். இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்களாகத்தானே நாம் உள்ளோம்! ஆமாம், அப்படித்தான் என்று ஒத்துக் கொள்ளுங்கள், தயக்கம் என்ன வேண்டி கிடக்கிறது. இயேசு ஆண்டவரின் வல்லமையான போதகங்களை காதாரக் கேட்டும், அவருடைய உண்மையான அற்புதங்களை கண் ணாரக் கண்டுமிருந்த சீடர்களையே தவறான எதிர்பார்ப்புடன் கூடிய மாம் சசிந்தை, இயேசுவை விட்டு ஓட வைத்திருக்கிறதென்றால், உங்களையும், என்னையும் விட்டு வைக்குமா? கண்டிப்பாக விட்டு வைக்காது.

பூமிக்குண்டான தேவைகளுக்காக இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள், ஏதாவது ஒரு கட்டத்தில் ஓடித்தான் போவார்கள். ஆகவே நாம் அப்படியாக இல்லாமல், பக்தன் யோபு போல், அவர் என்னைக்கொன்று போட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன் என்றும் (யோபு 17 : 15). பவுலடியார் போல், கிறிஸ்து எனக்கு, ஜீவன், சாவு எனக்கு ஆதாயம் ( பிலி. 1 : 21) என்றும் பின்பற்றுகிறவர்களாக இருப்போமாக!.

**II சொல்லும், செயலும் வேறாக இருந்ததால் ஓடிப்போனார்கள்:**

ஆண்டவர் இயேசுவைப் பின்பற்றுவதிலிருந்து, சீடர்கள் ஓடிப் போனதற்கான இரண்டாவது காரணமாக, சீடர்களின் சொல்லுக்கும், செயலுக்கும் சம்பந்தம் இல்லாமலிருந்ததை நாம் கூறலாம்.

நம்முடைய ஆண்டவராகிய இயேசுவைப் பற்றி வேதாகமம் கூறும் சிறப்புகளுள் ஒன்று. அவர், செய்யவும், உபதேசிக்கவும் தொடங்கினார் என்பது (அப். 1 : 3 ) எப்படி அவருடைய செயலுக்கும், உபதேசத்திற்கும் சம்பந்தம் இருந்ததோ அதைப் போலவே அவருடைய சொல்லுக்கும், செயலுக்கும் சம்பந்தமிருந்தது. ஆனால், இயேசுவின் சீடர்களின் சொல்லும், செயலும் வெவ்வேறாக இருந்தது.

ஆம், இயேசுவின் சீடர்கள் ஓடிப்போவதற்கு முன்பு எப்படியெல்லாம் பேசினார்கள் என்று கொஞ்சம் கவனியுங்கள். சீடர்களோடு நடந்த உரை யாடலின் ஒரு கட்டத்தில், உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப் பான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். ( மத். 26 : 21 ) ஆனால், அவர்களோ, தங்களில் யாருமே அந்தத் தவறைச் செய்யமாட்டாதது போல, “ நானோ, நானோ ” என்று ஒவ்வொருவராய்க் கேட்கத் தொடங்கினார்கள். பிறகு, ஓர் ஐந்து வசனங்கள் தள்ளி. இந்த இராத்

திரியிலே, நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள் என்றார் (26 : 31). இயேசு நடப்பதைத் தான் சொல்லுகிறார் என்று எண்ணிப் பேசாமல் இருக்க வேண்டியது தானே. ஆனால், இருக்க வில்லை. சிலுவைக்கு முன்னால், பெரும்பாலும் வாய்ச்சொல் வீரராக இருந்த பேதுரு, "...உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறல டையேன் " என்றதோடு (26 : 3), இந்த இராத்திரியிலே சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் என்று இயேசு சொன் னதற்கு, " நான் உம்மோடே மரிக்க வேண்டியிருந்தாலும் உம்மை மறுத லிக்க மாட்டேன் " என்றான் ( 26 : 35 ). இவனோடு சேர்ந்து, சீஷர்கள் எல்லாரும் அப்படியே சொல்லிவிட்டார்கள் (26 : 36). இவர்கள் பேச்சைப் பார்த்தால் மெய்சிலிர்க்கிறது. அவர் மாபெரும் பாக்கியம் பெற்றிருக்க வேண்டுமென்று கூட எண்ணத் தோன்றுகிறது.

ஆனால், நடந்தது என்ன? அவர்களுடைய சீஷத்துவத்துக்கான சவால் வந்தபோது, பின்னங்கால் பிடறியில் அடிக்க ஓடிப்போனார்கள். இவர் களையொத்த வாலிபன் ஒருவனை, மாற்கு ஆசிரியர் நமக்கு அடையாளம் காட்டுகிறார். (மாற் 10 : 17 – 22). இவன் , இயேசு சென்ற வழியில் ஓடிவந்து, நடரோட்டில் முழங்காலிடுகிறான். இயேசுவை நல்ல போதகரே என்று வாய் நிறைய அழைத்தான். நித்திய ஜீவனை சுதந்தரிக்க நான் என்ன செய்ய வேண்டும் என்றான் (வ 17) மோசேயின் பிரமாணங்களை என் சிறு வயது முதல் கைக்கொண்டிருக்கிறேன் என்றும் சொன்னான். ( வச 21). இவன் வந்த வேகத்தையும், இவன் பேசின பேச்சையும் பார்த்தால், உல கத்தில் பிறந்த ஒவ்வொருவனும் இவனைப் போலல்லவா இருக்க வேண்டு மென்பது போல் தெரிகிறது! ஆனால், வசனம் 22 க்கு வரும் போது, இவன் உலக ஆஸ்தியை விட மனமற்றவனாய் துக்கத்தோடே போய்விட்டான் என்று பார்க்கிறோம்.

அன்பானவர்களே, நாம் எல்லோரும் கிட்டத்தட்ட சிலுவைக்கு முன்னான சீடர்கள் போலும், இந்த பணக்கார வாலிபன் போலும் தானே இருக்கிறோம்? தேவனுக்கடுத்த காரியத்திலும், கிறிஸ்துவின் உபதேச காரி யத்திலும், கிறிஸ்து கட்டின ஒன்றான மெய்ச்சபை பற்றிய காரியங்களிலும் வெறும் பேச்சுத்தானே உள்ளது? நம்முடைய சீஷத்துவத்துக்கான விலை கொடுக்க வேண்டிய நேரம் வரும்போது நம்மில் எத்தனை பேர் அதற்குத் தயாராக இருக்கிறோம்? சொல்லுக்கும், செயலுக்கும் சம்பந்தமில்லாத ஒரு நிலைதானே காணப்படுகிறது.

சொல்லுக்கும், செயலுக்கும் சம்பந்தமில்லாமல் நடந்து கொண்ட சீடர்களுக்கு என்ன நேர்ந்தது என்று கண்டோம். ஆகையால், நாமும் நம்முடைய வாழ்க்கையில் சத்தியத்தின்படி செய்ய முற்படவில்லை யானால் இயேசுவை விட்டு விலகும்படியான நிலை வந்தேதீரும். நாம்

கவனமாயிருப்பது அவசியம்.

**III சரியான ஆயத்தமில்லாததால் ஓடிப்போனார்கள்**

ஆண்டவர் இயேசுவைப் பினபற்றுவதிலிருந்து சீடர்கள் ஓடிப்போன தற்கான இன்னுமொரு காரணமாக, சீடர்களின் ஆயத்தமின்மையை நாம் கூறலாம்.

தன்னுடைய காரியமாக மனிதன் செயல்பட அவனுக்கு ஆயத்தம் அவசியம் என்பதைத் தேவன் ஆதி முதலே வலியுறுத்தி வந்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்களுக்கு பத்துக்கட்டளைகளில் ஒன்றாக, ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக ( யாத் 20 : 8 ) என்று சொன்ன தேவன், ஓய்வு நாளுக்கு முந்தின நாளை ஆயத்த நாளாகக் கடைபிடிக்கும் படியாகக் கூறியுள்ளார் என்றே தெரிகிறது. (மாற் 15 : 42, லூக் 23 : 54). அதாவது, சில மணி நேரம் அவரைத் தொழுவதற்குக் கூட, மனிதன் தன்னை ஆயத்தமாக்கிக் கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். இப்படி சில மணி நேரம் தேவனோடு உறவாடுவதற்கே ஆயத்தம் அவசியம் என்பது தேவ திட்டமாகவும், தேவ எதிர்பார்ப்பாகவும் இருக்குமானால், இயேசுவைப் பின்பற்றி, அதன் பலனாக மறுமையைச் சுதந்தரித்து, அவரோடு கூட என்றென்றும் வாழும் பாக்கியம் பெற சீடர்களுக்கு எவ்வளவு ஆயத்தம் இருந்திருக்க வேண்டுமென்பதை எண்ணிப்பாருங்கள்.

இந்தப் பன்னிரெண்டு சீடர்களுக்கும், அந்நாட்களில் ஏராளமாய் அவரைப் பின்பற்றின சீடர்களுக்கும், ஆயத்தம் முக்கியம் என்பதை உணர்த்தவே 10 கன்னிகைகள் உவமையைச் சொன்னார். அதன் மூலம், ஆயத்தத்திற்கும், ஆயத்தமின்மைக்கும் மிகப்பெரிய வேறுபாடுண்டு என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டினார். ஆயத்தமாயிருந்த புத்தியுள்ள வர்கள் தான் மணவாளனோடே, கல்யாண வீட்டுக்குள் பிரவேசித்துள் ளார்கள் ( மத். 25 : 10 ). மற்றவர்கள், ஓடிப்போகவில்லை, அதைவிட மோசமாக விரட்டப்பட்டிருக்கிறார்கள்.

நம்முடைய இரட்சகர், தான் காட்டிக்கொடுக்கப்படும் நாளுக்காகவும், அதைத் தொடர்ந்து நடக்கப்போகும் சவாலான காரியங்களுக்காகவும் சீடர்களை ஆயத்தப்படுத்தியே உள்ளார். வழக்கம் போல, தன் பங்கில் அவர் குறை ஏதும் வைக்கவில்லை. ஆம், மத்16 : 21 -ல் " அது முதல் இயேசு தாம் எருசலேமுக்கு போய் மூப்பராலும், பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பல பாடுகள்பட்டு, கொலையுண்டு மூன்றாம் நாளில் எழுந்திருக்க வேண்டும் என்பதைத் தம்முடைய சீடர்களுக்குச் சொல்லத் தொடங்கினார் " . அத்தோடு, மத் 26 : 31ல், " ... இயேசு அவர்களை நோக்கி, மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று

எழுதியிருக்கிறபடி இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள் " என்றார். ஆனாலும்,சீடர்கள் எதிர் வரும் சூழ்நிலைக்கு ஆயத்தமாகவில்லை. கண்டிப்பாக, இது இயேசு ஆண்டவரின் தவறு அல்ல.

ஒருவேளை இவர்கள் இயேசுவின் வார்த்தைகளை அலட்சியப்படுத்தாமல், தங்களை எல்லா வகையிலும் ஆயத்தப்படுத்தியிருந்தால் ஓடிப்போக வேண்டிய நிலை வந்திருக்காது. சிலுவைக்குப் பின்னால், கிறிஸ்துவின் காரியமாக " ஓகோ " என்று வாழ்ந்த இவர்களை நாம் இப்படி குறைத்துப் பேச வேண்டிய நிர்பந்தமும் ஏற்பட்டிருக்காது.

இயேசு ஆண்டவரையும், அவருடைய உபதேசத்தையும், ஏற்று நடக்க விரும்பும் நாம் நம்முடைய பக்தி வாழ்க்கையில் ஆயத்தமாயிருக்க வேண்டியது மிகவும் அவசியம். " இதோ சீக்கிரமாய் வருகிறேன் " என்று இயேசு சொல்லிச் சென்றிருக்கிறார். புதிய ஏற்பாட்டின் கடைசி நூலாகிய வெளிப்படுத்தலின் கடைசி அதிகாரத்தில் மட்டும் " இதோ நான் சீக்கிரமாய் வருகிறேன் " என்றும் மூன்று முறை சொல்லப்பட்டிருக்கிறது (வெளி 22 : 7,12, 20) . ஆனால், அந்த நாள் எப்பொழுது என்று தெரியாது. மத். 24 : 36 -ல் இயேசுவானவர், அந்த நாளையும், அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதனும் அறியார்கள் என்று கூறிவிட்டார். அப்படியானால், இயேசுவைப் பின்பற்றும் அவருடைய சீஷன் என்ன செய்ய வேண்டும்? ஆயத்தத்தோடு காத்திருக்க வேண்டும் அவ்வளவுதான். பவுலடியார் கொரிந்தியர்களுக்கு எழுதும் போது, அப்படியே நீங்களும் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுத்துவதற்குக் காத்திருக்கிறீர்கள் என்கிறார். (1 கொரி. 1 : 7). இன்னும், அதே பவுலடியார், பிலிப்பியருக்கு எழுதும் போது, .... இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்கிறார் (பிலி 3 :20).

ஆக, வாக்குமாறாத இயேசு கிறிஸ்து மீண்டும் வருவது நிச்சயம். ஆகையால், அவரது வருகைக்காக, இயேசுவின் வார்த்தைகளடங்கிய புதிய ஏற்பாட்டை அலட்சியம் செய்யாமல், அவருடைய உபதேசங்களின் உள்ளான பொருளை அறிந்து, அவைகளினடிப்படையில் நாம் நம்மை ஆயத்தமாக்க வேண்டும். சிலுவைக்கு முன்னான சீடர்கள் போல், இயேசு கொடுக்கும் எச்சரிப்பின் வார்த்தைகளை நாம் அலட்சியம் செய்வோமானால், அந்நாளில் நாம் அவருடைய சமூகத்தை விட்டு வெட்கத்தோடே ஓடிப்போவோம் அல்லது, " ... அக்கிரமச் செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள் என்று விரட்டப்படுவோம் " (மத். 7 : 23)

அருமையானவர்களே, இந்த நிலை நம்மில் யாருக்கும் வராமல், நம்மை கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்தால் காத்துக் கொள்ள பரலோகத்தின் தேவன் நமக்கு இரக்கம் கட்டளையிடுவராக! ஆமென். ●

# ஏன் நாங்கள் சாத்தான் இருப்பதை விசுவாசிக்கிறோம்?

Bro. J.C. சோட்

இந்த நாகரீக காலத்தில், சாத்தான் இருப்பதாக ஒருவன் ஏன் நம்ப வேண்டும் என்று சிலர் ஆச்சரியப்படலாம். மனிதன் விண்வெளிக்குச் செல் கின்ற இந்தக் காலகட்டத்தில் நிச்சயமாகவே பிசாசு போன்றவைகள் எல்லாம் எடுபடாது என்று அவர்கள் சொல்கிறார்கள். இப்படி வாதம் செய்கிறவர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொள்கிறவர்களாகவே இருக்கிறார்கள்.

ஆனால், சாத்தான் இருக்கிறான். அவன் வாழ்கிறான். தேவன், கிறிஸ்து எப்படி இருக்கிறார்களோ அப்படியே பிசாசும் இருக்கிறான். அவன் உலக முழுவதிலும் வாழ்கிறான். அவனுடைய கிரியைகள் எங்கும் தெரி கிறது. அவனுடைய செல்வாக்கு ஒவ்வொருவரிடத்திலும் காணப்படுகிறது. அது மட்டுமல்ல, அவன் மனிதனல்ல, ஆனால், அவன் ஒரு ஆவி, அசுத்த ஆவி. தேவனும், கிறிஸ்துவும் எதற்கு அடையாளமாக இருக்கிறார்களோ, அதற்கு நேர் எதிரானவன். தவறான மற்றும் கெட்டவைகளுக்கு பின்னால் அவன் எப்போதுமே இருக்கிறான். அவன் பிசாசு என்றும் துன்மார்க்கன் என்றும், பொய்க்குப் பிதா என்றும், இந்தப் பிரபஞ்சத்தின் தேவன் என்றும் அழைக்கப்படுகிறான். அவன் அந்தகாரம், பாவம் மற்றும் துக்கம் போன்றவைகளுக்கு அடையாளமாக இருக்கிறான். அவன் மரணத்தை உண்டாக்கி, நித்திய அழிவைக் கொண்டு வருகிறான். அவன் நம்முடைய சத்துருவாக இருக்கிறபடியால், அவனைப் பற்றி நாம் நன்றாக அறிந்திருக்க வேண்டும். நாம் அவனை எந்த அளவுக்கு அறிந்து, அவன் கிரியைகளைப் புரிந்துவைத்திருக்கிறோமோ, அந்தளவுக்கு அவனைச் சந்திக்க நாம் நம்மை ஆயத்தமாக்க முடியும். இதற்கேற்ற அறிவும் முறையான போராயுதமும் இல்லையானால், அவனால் நம்மை வஞ்சித்து, மேற்கொண்டு அழித்துப் போட முடியும்.

இப்போது நாம் தேவனுடைய வார்த்தைக்குப் போய், சாத்தானைப் பற்றியும், அவனுடைய கிரியைகள் பற்றியும் பேசுகின்ற சில வசனங்களை வாசிப்போம். இயேசு, நிலத்தின் களைகள் பற்றிய உவமையை விளக்கும் போது, களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர் என்றும், அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு என்றும் சொன்னார். (மத்தேயு 13 :38,39).

பேதுரு தன்னுடைய நாட்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு இப்படியாக எழுதினார். “ தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள்; விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான் ” ( பேதுரு 5 : 8 ). பவுல் சாத்தானை சோதனைக்காரனாகச் சொல்கிறார். ஆகையால், “ நான் இனிப்பொறுத்திருக்கக்கூடாமல், எங்கள் வேலை வீணாய்ப் போகத்தக்கதாகச் சோதனைக்காரன் உங்களைச் சோதனைக்குட்படுத்தினதுண்டோவென்று, உங்கள் விசுவாசத்தை அறியும்படிக்கு அவனை அனுப்பினான் ” (I தெசலோனிக்கேயர் 3: 5) . இயேசுவின் நாட்களில் வாழ்ந்த மதப்பிரிவினர், கர்த்தர் பெயெல்செபூலின் வல்லமையினாலே பிசாசுகளைத் துரத்தினார் என்று குற்றஞ்சாட்டினார்கள். “அப்பொழுது பிசாசு பிடித்த குருடும் ஊமையுமான ஒருவன் அவரிடத்தில் கொண்டு வரப்பட்டான் : குருடும் ஊமையுமானவன் பேசவும் காணவுதக்கதாக அவனைச் சொஸ்தமாக்கினார். ஜனங்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு; தாவீதின் குமாரன் இவர்தானே? என்றார்கள். பரிசேயர் அதைக்கேட்டு : இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்துகிறானேயல்லாமல் மற்றபடியல்ல என்றார்கள். இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களை நோக்கி : தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம்; தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்தப் பட்டணமும், எந்த வீடும் நிலை நிற்க மாட்டாது. சாத்தானைச் சாத்தான் துரத்தினால் தனக்கு விரோதமாகத்தானே பிரிவினை செய்கிறதாயிருக்குமே ; அப்படிச்செய்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலை நிற்கும்? நான் பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்தினால், உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்? ஆகையால், அவர்களே உங்களை நியாயந்தீர்க்கிறவர்களாயிருப்பார்கள். நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே. அன்றியும், பலவானை முந்திக் கட்டினாலொழிய பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து, அவன் உடைமைகளை எப்படி கொள்ளையிடக்கூடும்? கட்டினானேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடலாம், என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடேசேர்க்காதவன் சிதறடிக்கிறான் ” (மத்தேயு 12 : 23-30) என்று வாசிக்கிறோம்.

கிறிஸ்து தம்முடைய நாட்களில் வாழ்ந்த சிலரைப் பார்த்து, “ நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள் ; உங்கள் பிதாவி

னுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள் ; அவன் ஆதிமுதற் கொண்டு மனுஷகொலைபாதகனாயிருக்கிறான் ; சத்தியம் அவனிடத்திலில் லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலை நிற்கவில்லை ; அவன் பொய் யனும், பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும் போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான், நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொல்லுகிறபடியினாலே நீங்கள் என்னை விசுவாசிக்கிறதில்லை " (யோவான் 8 : 44, 45 ). இயேசு தம்முடைய சீஷர்களிடம் இதைச் சொன்னார். " இனி நான் உங்களுடனே அதிகமாய்ப் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை " ( யோவான் 14 : 30 ). பவுல் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு, ‘‘எங்கள் சுவிசேஷம் மறை பொருளாயிருந்தால், கெட்டுப் போகிறவர்களுக்கே அது மறை பொருளாயிருக்கும். தேவனுடைய சாயலிலிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசு வாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான் " (கொரிந்தியர் 4 : 3,4) என எழுதினார்.

ஆனால், அந்த சாத்தான் எங்கே இருந்து வந்தான்? என்று நீங்கள் கேட்கலாம். எல்லாவற்றையும் உண்டாக்கினது தேவனாயிருக்கிறபடியால் (ஆதி. 1 : 1) இந்த சாத்தானையும் அவனோடுச் சேர்ந்த எல்லா தேவதூதர் களையும் உண்டாக்கினது தேவனே. பிசாசு தன்னைத்தான் உயர்த்தி, தன்னை உண்டாக்கினவருக்கு எதிராக கலகம் செய்து, தேவனுடைய சத்து ருவாக மாறினான். I பேதுரு 2 : 4 இவ்விதமாய்ச் சொல்கிறது " பாவஞ் செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்ட வர்களாக ஒப்புக்கொடுத்து " என்று. மேலும் பேதுரு, தேவன் யாரையெல்லாம் தப்ப விடவில்லை என்று சொல்கிறார். இங்கே கருத்து என்னவென்றால், நாம் தேவனையும் அவருடைய சித்தத்தையும் எதிர்த்தால் அதற்கான விளைவை நாம் அனுபவிக்க வேண்டியதாயிருக்கும். யூதா 6 ஆம் வசனத்தில் நாம் இப்படி வாசிக்கிறோம். " தங்களுடைய ஆதி மேன்மை யைக் காத்துக் கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டு விட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத் தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலி களினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார் ". நியாயத் தீர்ப்பு நாளிலே கிறிஸ்து துன்மார்க்கரைப் பார்த்து இவ்விதமாகச் சொல் வார். " சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும், அவன் தூதர் களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங் கள் " (மத்தேயு 25 : 41) என்று.

படைப்பின் ஆரம்ப காலத்திற்கு நாம் திரும்பும் போது, ஆதாமையும் ஏவாளையும் தேவன் சிருஷ்டித்த பிறகு, ஏதேன் தோட்டத்தில் அவர்களை வைத்து, தோட்டத்திலிருக்கிற சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும், நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம் என்று சொல்லியிருந்தார். இதன் மூலம், விலக்கப்படும் கனியைப் புசித்தால் அவர்கள் சாகவே சாவார்கள் என்று தெளிவுபடுத்தப்பட்டிருந்தது.

விலக்கப்பட்ட கனியைப் புசித்த அந்த நாளிலே மனுஷனும், மனுஷியும் ஆவிக்குரிய பிராகாரமாக மரித்து விட்டார்கள். ஆனால் தேவன் தொடர்ந்து ஆதாம், ஏவாள், சர்ப்பம் மற்றும் எல்லா சிருஷ்டிகளின் மீதும் சாபத்தை சுமத்திக் கொண்டிருந்தார். மத்தேயு நான்காம் அதிகாரத்தில், சோதனைக்காரனான சாத்தானே கிறிஸ்துவிடம் வந்தான். அவன் இயேசு தன்னை பணிந்து கொள்ளும்படி மூன்று வெவ்வேறுபட்ட சூழ்நிலைகளில் முயற்சி செய்தான். ஆனால், ஒவ்வொரு முறையும் கிறிஸ்து " எழுதியிருக்கிறதே " என்பதாகப் பதில் அளித்தார். இறுதியில், பிசாசு தோற்றுப் போனவனாக அவரை விட்டுப் போனான்.

சாத்தானின் மீது இயேசு பெற்ற மிகப்பெரிய வெற்றி கல்லறையிலிருந்து அவர் உயிரோடு எழுந்ததுதான ; இயேசு உயிரோடு எழுந்ததின் மூலம் தாம் தேவனுடைய குமாரன் என்பதை நிரூபித்தது மட்டுமல்ல, எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை சாத்தியப்படுத்தி, ஒவ்வொருவருக்கும் எதிர்கால உயிர்த்தெழுதலை நிச்சயப்படுத்தினார். கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்து, அவருக்கு உண்மையாயிருக்கிற யாவரையும் அவர் இரட்சித்து, எல்லா சோதனைகளையும் மேற்கொள்ள அவர்களுக்கு உதவி செய்து, கடைசியாக பரலோகத்திற்கு அவர்களை அழைத்துச் செல்வார் என்கிற வாக்குத்தத்தம் இருக்கிறது.

என் நண்பர்களே! சாத்தானை, பழைய பிசாசை உங்கள் வாழ்க்கையை கட்டுப்படுத்த நீங்கள் அனுமதிக்க வேண்டாம். இந்த உலகத்தின் காரியங்களைக் கொண்டு சாத்தான் உங்களை வசப்படுத்திக் கொள்ள நீங்கள் அனுமதிக்க வேண்டாம். இந்த உலகத்தின் காரியங்களாகிய மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை போன்றவைகளை சாத்தான் உங்களுக்கெதிராக பயன்படுத்த நீங்கள் அனுமதிக்க வேண்டாம். தவறான மதம், மனிதருடைய போதனைகள் போன்றவைகளைப் பயன்படுத்தி சாத்தான் உங்களை வழிவிலகிப் போகச் செய்ய அனுமதிக்க வேண்டாம். தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமம்,

சத்தியத்தின் அழகையும், நித்திய ஜீவனின் வழியையும் விவரிக் கிறது. அதே நேரத்தில், முடிவான மரணத்தை கொண்டு வருகின்ற சாத் தானின் தந்திரத்தையும், வஞ்சகமான வழிகளையும் குறித்து எச்சரிக்கிறது.

சாத்தானுக்கு விரோதமாக எச்சரிக்கையாயிருங்கள். அவனால் வஞ்சிக்கப்படாதிருங்கள். தேவனுடைய வார்த்தையை வாசியுங்கள், படி யுங்கள். கர்த்தரையும், அவருடைய வழிகளையும் கற்றுக்கொள்ளுங்கள். அதே வேளையில், உங்கள் எதிராளியாகிய சாத்தான் பற்றி வேதவசனங் களிலிருந்து தெரிந்து கொள்ளுங்கள். பிதாவாகிய தேவனிடத்திலும், ஜீவ னுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினிடத்திலும் விசுவாசம் வையுங்கள். " விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப் பது கூடாத காரியம் " (எபிரெயர் 11 : 6).

நாம் தேவனை விசுவாசித்தால், கிறிஸ்துவையும் விசுவாசிக்க வேண்டும் என்று கிறிஸ்து சொன்னார் (யோவான் 14 : 1 – 3), நாம் கிறிஸ்து வைப் பின்பற்றும்படி சாத்தானிடமிருந்தும், பாவங்களிடமிருந்தும் எல்லா தவறான, மோசமான காரியங்களிடமிருந்தும் திரும்ப வேண்டும். எல்லோரும் மனந்திரும்ப வேண்டுமென்று தேவன் கட்டளையிட்டுள்ளதாக நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. ( அப். 17 : 30 ). நாம் மனந்திரும்ப வில்லை யென்றால் கெட்டுப்போவோம் என்று கிறிஸ்து சொல்லியுள்ளார் (லூக்கா 13 : 3). கிறிஸ்துவை தேவனுடையகுமாரன் என்று நாம் அறிக்கை செய்ய வேண்டும் (மத்தேயு 10 : 32). நாம் மனுஷருக்கு முன்பாக கர்த்தரை அறிக்கை செய்தால், அவர் நம்மை பரலோகத்திலிருக்கிற பிதாவுக்கு முன்பாக அறிக்கை செய்வார். கடைசியாக, நம் பாவமன்னிப்பிற்காக தண்ணீரில் அடக்கம் பண்ணப்பட வேண்டும் அல்லது ஞானஸ்நானம் பெற வேண்டுமென்று கட்டளை பெற்றிருக்கிறோம். நாம் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, ஞானஸ்நானம் பெற்றால் அவர் நம்மை இரட்சிப்பதாகச் சொல்கிறார் ( மாற்கு 16 : 16 ). நாம் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றால் பாவமன்னிப்பைப் பெறுவோம் என்று பேதுரு சொல்கிறார் (அப்போஸ்தலர் 2 : 38).நாம் அதைச் செய்யும் போது, கர்த்தர் நம்மை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்வதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் ( அப்போஸ்தலர் 2 : 47 ). இதன் மூலம் நாம் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாக இருப்போம். ( II கொரி. 5 : 17 ). அவைகளை செய்தால், நாம் ஒருபோதும் சாத்தானுடையவர்களாக இருக்கமாட்டோம் ; மாறாக, கிறிஸ்துவினுடையவர்களாயிருந்து கிறிஸ்த வர்களென்று அழைக்கப்பட்டு ( I பேதுரு 4 : 16 ) மரணபரியந்தம் கர்த் தருக்கு உண்மையுள்ளவர்களாயிருந்து பரலோக வீட்டைப் பெற்றுக் கொள்வோம் (வெளி. 2 : 10 ; வெளி. 22 : 14).

# ஆண்கள் தலைமைக்கும், பெண்கள் அவர்கள் துணைக்கும்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

ஒரு ஆண்பிள்ளைக்கு, அவனுடைய இளம்பருவத்திற்கான காரியங்கள் மற்றும் பண விஷயங்களில் அவன் கவனமாக இருக்க வேண்டியதன் அவசியம் பற்றிப் போதிப்பதைக் காட்டிலும், அவன் வளரும் போதே, தேவ மனிதனுக்கேற்ற பண்புகளைப் பெற்றுக்கொள்ளும்படி போதிப்பது முக்கியமானது.

அதாவது, தன்னுடைய குடும்பத்திற்கு, அவன் அன்பான ஒரு தலைவனாக இருப்பது பற்றி, தன்னுடைய மனைவிக்கும், பிள்ளைகளுக்குமிடையே, பொறுப்புள்ளவனாக நிற்க வேண்டியது பற்றி, குடும்பத்திற்கும், உலத்திற்கும் இடையே நிற்க வேண்டியது பற்றி, குடும்பத்திற்கு ஆவிக்குரிய தலைவனாக இருப்பது பற்றி, குடும்பம் எடுக்கும் முடிவுகளுக்கு தேவனுக்குப் பதிலளிக்க வேண்டிய அவசியம் பற்றியெல்லாம் போதிக்க வேண்டும்.

ஆண்களோடு போட்டியிடும் வண்ணம், இன்றைய பெண் பிள்ளைகளின் பொதுவான வளர்ப்பும், பயிற்சியும் அமைந்திருக்கிறது. இப்படிப்பட்ட அமைப்பினால், பெண்கள் தங்கள் வாழ்க்கைத் துணைவருடன் பிரச்சினையை சந்திக்க நேரிடுகிறது. திருமண உறவுக்குள் தன்னை உட்படுத்தும் வேளைக்காக ஆயத்தப்படுத்தவும், தன்னை தெரிந்து கொண்ட (அல்லது தான் தெரிந்து கொண்ட) கணவரின் வாழ்க்கை முழுமையாகச் செய்யவும், தன் குடும்பத்தின் மேல் அன்புள்ளவளாக, கரிசனையுள்ளவளாக இருக்கவும், தேவன் தன் கணவனை தன்னுடைய நலனுக்காகவே உண்டாக்கியிருக்கிறார் என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என்று ஒரு பெண்ணிடம் தேவன் எதிர்பார்க்கிறார். நிச்சயமாகவே, தன் கணவனுக்குச் சிறந்த துணையாக அமையவும், தன் பிள்ளைகளை சிறப்பாக வளர்க்கவும் அவள் தன் மனதை தரமான கல்வி அறிவுடன் வளர்க்க வேண்டும்.

ஆனால், துரதிஷ்டவசமாக, எளிமையான இல்லத்தரசியாகவும், தாயாகவும், மனைவியாகவும் இருப்பதில் ஆர்வமின்மையால், பெண்கள் இக்காரியத்தைக் குறித்து பெரிதாகக் கவலைப்படுகிறார்கள். இது ஒரு சோகமான, ஆர்வம் காட்ட முடியாத வேலை என்ற கருத்து நிலவுவதினால் அநேகத்

தாய்மார்கள் தங்கள் பிள்ளை வளர்ப்பிலிருந்து தப்பித்துக் கொண்டு அலுவலகங்களில் வேலை பார்க்கும் உற்சாகத்தை அடையக் கொஞ்சமும் தாமதிப்பதில்லை. இப்படிப்பட்ட மனோபாவங்கள் அதிகமாய் கற்றுக்கொடுக்கப்பட்டவை – நமது கலாச்சாரம், ஒன்றுக்கும் உதவாதவர்களும், அடக்கப்பட்டவர்களும் தான் வீட்டிலிருப்பார்கள் என்றும், தாலந்துள்ளவர்கள், உலகத்தில் போட்டி போட்டுக்கொண்டு தங்களுக்கென்று நல்லதொரு எதிர்காலத்தை உண்டாக்கி, அதிகமாய் சம்பாதிப்பார்கள் என்றும் மீண்டும் மீண்டும் சொல்லிக் கொடுக்கிறது.

கடந்த தலைமுறையில் தாய்மைத்தவம் என்பது பெருமையாகப் பேசப் பட்ட ஒன்றாக இருந்தது. பெண்கள் தங்கள் பிள்ளைகளில் மகிமையடைந் தார்கள். தங்கள் கணவனிமித்தம் புகழ்ச்சி அடைந்தார்கள். தங்கள் திறமை களை குடும்பத்திற்காகப் பயன்படுத்துவதை கௌரமாக எண்ணினார்கள். அவர்களெல்லாம், நசுக்கப்பட்டவர்களோ அல்லது வெறுப்படைந்தவர் களோ, கல்லாதவர்களோ, வாழ்க்கையைப் பற்றி ஒன்றும் தெரியாதவர்க ளோ அல்ல. தங்களைப்பற்றியும், தாங்கள் என்ன செய்கிறார்களோ அது பற்றியும் மகிழ்ச்சியாயிருந்தார்கள். ஏனென்றால், அவர்கள் தேவனுடைய சித்தத்தைப் பற்றி கற்பிக்கப்பட்டிருந்தார்கள்.

**I அவர்கள் என்ன கேட்கிறார்கள் அல்லது எதைப் பார்க்கிறார்கள்?**

நாம் எப்படி சிறப்பாகக் கற்றுக்கொள்ள முடியும்? நம் குழந்தைகள் எப்படி சிறப்பாக கற்றுக்கொள்ள முடியும்?

**வாயின் வார்த்தைகளினால்** :– அன்றாடம், பெற்றோராகிய நாம் நம் பிள்ளைகளை வெற்றியுள்ள வாலிபர்களாக வளருவதற்கு நம் வாயின் வார்த்தைகள் அவர்கள் கற்றுக்கொள்ளும்படியாக இருக்க வேண்டும்.

**வாழ்க்கையினால்** :– நாம் வார்த்தைகளை தொடர்ந்து பேசாமல் இப் பொன்றும் பிறகொன்றுமாக பேசுகிறோம். ஆனால், நாம் ஒரு நாளின் இரு பத்து நான்கு மணி நேரமும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தானாகவே, நம் பிள்ளைகள் நம்மிடமிருந்து எதைப் பார்க்கிறார்களோ அதையே பல மடங்கு அதிகமாகக் கற்றுக்கொள்ள முடியும்.

குறிப்பாக, இதுதான் உண்மையான மனோநிலை. ஒரு பெண் ஓயாமல் தன் கணவனுடன் வாக்குவாதம் செய்து கொண்டு, அவனுடைய தலைமைத்துவத்தை சவால் விட்டுக் கொண்டு இருக்கும் போது, தன் னுடைய பெண்பிள்ளைகள் அவர்கள் கணவன்மார்களுக்கு கீழ்ப்படிந்து அவர்களை மதிக்கச் சொல்லி கற்றுக்கொடுக்கும்போது அவள் முழு வெற்றியையும் அடைந்து விட முடியாது. அதைப்போலவே, தன் மனைவியை அற்பமாய் எண்ணுகிற ஒரு கணவன் தன் ஆண் மக்கள் அவர்களுடைய மனைவிகளில், கிறிஸ்து சபையில் அன்பு கூருவது போல

அன்பு கூரவேண்டுமென்று கற்றுத்தர முடியாது. அத்தோடு தன் மகன்களை ஒரு பொறுப்புள்ள, தலைமையேற்று நடத்தக் கூடிய பண்புள்ள வர்களாக உருவாக்க முடியாது. சந்தேகத்திற்கிடமின்றி, நம்முடைய பிள்ளைககள் நம்முடைய பிள்ளைகள் அவர்களுடைய வாழ்க்கையைப் பற்றியதான அணுகுமுறைகளை நம்மைப் பார்த்துதான் கற்றுக் கொள்கிறார்கள். ஆகையால், நாம் கற்றுக்கொடுக்கக்கூடிய விஷயங்களில் மிகவும் ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

**II அதிகாரம், உண்மையாகவே யாரிடத்திலிருந்து வருகிறது?**

ஆண், பெண், பெற்றோர் என்ற நம்முடைய பின்னிப்பிணைந்த இந்த உறவில், அதிகாரங்களை நாம் யாரிடமிருந்து பெற்றுக்கொள்கிறோம்? தலைமையேற்று நடத்துவது, கீழ்ப்படிந்து போவது என்பதெல்லாம் சாதார ணமாக வழக்கத்தில் உள்ள ஒன்று. மற்றபடி இதில் ஏதும் சிறப்பு இல்லையென்று மக்கள் அநேக சமயங்களில் நினைத்து விடுகிறார்கள். ஆண்கள் தங்களுக்கேயுள்ள பலத்தால் பெண்களை ஆளுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு பொதுவாக நிலவி வருகிறது. பெண்களும் தங்கள் கண வனுக்கு கீழ்ப்படிந்து நடக்கும்போது, மிகவும் அற்பமாய் சுய நலமாயும் ஆண்களால் நடத்தப்படுகிறார்கள் என்ற எண்ணம் இருந்து வந்தது. இன் றைய நாட்களில் அநேக குழந்கைள் எந்தவிதமான அதிகாரங்களையும் மதிப்பதில்லை. தங்களை கண்டிக்கிறவர்களிடமும் ஒரு விதமாக ஆத்திரத் துடனும், கீழ்ப்படிய மனமில்லாமலும் கூடிய முகத்தை வைத்துக் கொண் டும் உள்ளனர். உதாரணமாக, பெற்றோர், ஆசிரியர், அதிகாரிகள் அரசாங்கம் போன்றோரிடம் இவ்வாறு நடந்து வருகிறார்கள்.

அதிகாரங்கள் தேவனிடத்திலிருந்து வருகிறது. அவர்தான் எல்லா மனித இனத்திற்கும், மனித இனம் சம்பந்தப்பட்டவைகளுக்கும் சர்வ அதிகாரி. ஆண் குடும்பத்திற்கு தலையானவன் என்று அவர் சொல்லும் போது அந்தத் தகுதியான வேலைக்கு அவனை நியமித்தார் என்பதை சிருஷ்டிகர் என்ற அதிகாரத்தால் அவர் அவ்வாறு கூறுகிறார். ஆணுக்கு துணையாகப் பெண்ணை உருவாக்கி, வாழ்க்கையில் அவளுடைய பங்குகளை நியமிக்கும்போது மீண்டும் சிருஷ்டிகர் என்ற அதே அதிகாரத்தில் தான் அவ்வாறு செய்கிறார். எந்த ஒரு மனிதனும் தேவனுடைய அதிகாரம் அவருடைய கட்டளை, அவருடைய ஒழுங்கு முறை மீது சவால்விட்டுப் பெற்றுவிட முடியாது.

இந்தப் பொறுப்பை ஒரு மனிதன் ஏற்றுக்கொள்ள மறுக்கும்போது, குற் றம் சாட்டுகின்ற மகிழ்ச்சியில்லாத மனைவியோடு வேண்டா வெறுப்பாக வாழ வேண்டிவரும். தேவன் தன்னுடைய அதிகாரத்தால் சொன்ன கட்ட ளைக்கு இவன் கீழ்ப்படியாததுதான் இந்த எதிர்ப்புக்குக் காரணம். தங்கள்

கணவன்மார்களின் தலைமைத்துவத்தை ஏற்காத பெண்களுக்கும் இதே நிலைதான். தேவனோடு அவள் போர் செய்கிறவளாக காணப்படுவாள்.

இந்த உண்மையை ஆண்களும் பெண்களும் தங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுப்பது அவசியம். நான் உனக்கு சொல்கிறேன் நீ இதை செய் என்று பெற்றோர் பிள்ளைகளிடத்தில் சொல்லக்கூடாது. அதே, நேரத்தில், தாங்கள் பெற்றோராய் இருப்பதால், நாங்கள் அப்படி செய்கிறோம் என்பதை வலியுறுத்த வேண்டும். அப்படிச் செய்வது அவர்களிடையேயுள்ள பெற்றோருக்கு விரோதமாக எழும்பும் ஆத்திர குணம், உதாசினப் படுத்துதல் ஆகிய தன்மைகளை களைந்தெறியச் செய்ய உதவும். அத்தோடு கூட தேவனுடைய அதிகாரத்திற்கு அவர்கள் தங்களை தகுதிப்படுத்த அது பிரயோஜனமாயிருக்கும்.

" பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள். இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடிப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது. பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் போபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக " (எபே. 6 : 1 – 4 ). " பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்கு எல்லா காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள் ; இது கர்த்தருக்கு பிரியமானது " (கொலோ. 3 : 20).

பிள்ளையானவன் தங்கள் பெற்றோர் தேவனுடைய அதிகாரத்தின் கீழே கொடுக்கப்பட்டவர்கள் என்பதை கட்டாயம் உணர வேண்டும். தேவனிடத்தில் அன்பு கூருதல், பெற்றோருக்கு கீழ்ப்படிதல், சட்டங்களுக்கு கீழ்ப்படிதல், இப்படியே ஆயிரக்கணக்கான ஒவ்வொரு காரியங்களுக்கும் பெற்றோர் தங்கள் பிள்ளைகளிடம் தங்கள் சொந்த இஷ்டப்படி அதிகாரம் செலுத்தவே கூடாது. பெற்றோர்கள் பிள்ளை வளர்ப்பு சம்பந்தமாக எப்படி தேவ சட்டத்திற்குக் கீழ்ப்படிய வேண்டுமோ அதே போல் பிள்ளைகளும் பெற்றோருக்காக அல்லாமல் தேவனுக்காக அப்படிச் செய்ய வேண்டும்.

மனித உறவு என்னும் சொத்தை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு அனுப்புவதென்பது பயத்துடனும், பொறுப்புடனும் செய்யப்படக்கூடிய வேலையாகும். குடும்பத்தலைவனாய் இருப்பதால் ஒரு கணவனுக்கு இதில் முக்கியப் பங்குண்டு. ஆனால், மனைவியானவள் வீட்டிலிருந்து கொண்டு தன் பிள்ளைகளை ஊட்டி வளர்க்கும் தனி சிலாக்கியம் பெற்றிருப்பதால், அவள் கணவனைக் காட்டிலும் பிள்ளைகளுக்கு அதிகம் கற்றுத்தர முடியும். இவைகள் நாம் பிடித்துக் கொள்வது தேவ சித்தமாகும். இவைகளின்படி செய்கிற குடும்பங்கள் பாக்கியமுள்ளவைகள்.

வாலிபர் பகுதி

# கணக்கு கொடுக்க வேண்டும்

Bro. பென்னி மார்ட்டின்

**வா**லிப உள்ளங்களே! உங்களை இந்தக் கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த உலகில் ஒவ்வொரு மனிதனும் செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவு உண்டு. அந்த வகையில் நம் தேவன் நம்மை இந்தப் பூமியில் வைத்திருப்பதன் நோக்கம் நாம் அவரை மகிமைப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் (ஏசாயா 43 : 7 ) இவ்வுலகில் நாம் செய்யும் ஒவ்வொரு கிரியைக்கும் நிச்சயமாகவே நியாயத்தீர்ப்பின் நாளிலே கணக்குக் கொடுக்க வேண்டும். இந்த நியாயத்தீர்ப்பின் நாள் இந்த உலகில் தேவனுக்குப் பிரியமானவைகளைச் செய்பவர்களுக்கு ஆசீர்வாதமான நாளாகவும், தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களைச் செய்பவர்களுக்கு பயங்கரமான நாளாகவும் காணப்படும். இப்போது அந்த நியாயதீர்ப்பின் நாளை எப்படி மகிழ்ச்சியின் நாளாக மாற்றுவது என்பது பற்றி சில காரியங்களை வேத வசனத்தின் வெளிச்சத்தில் காண்போம்.

இன்றைய நாட்களில் வாலிபர்கள் வரலாறு காணாத வருமானங் களை ஈட்டி வருகிறார்கள். கை நிறைய காசு இருந்தால்தான் கவலை யில்லாமல் வாழ முடியும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆவியின் கனியைத் தர வேண்டிய வாலிபர்கள் பிசாசுக்கு இடங்கொடுத்து வாழ்க்கை யில் இடறி விழுகிறார்கள். பிசாசுக்கு நம்முடைய எண்ணங்கள் எல்லாம் தெரியாது. நம்முடைய எண்ணங்களை அறியக்கூடியவர், இருதயங்களை அறியக்கூடியவர் தேவன் ஒருவரே. ஆனால், தந்திரமான பிசாசு வாலிபர்கள் எந்தப் பகுதியில் நாட்டமுடையவர்களாய் இருக்கிறார்களோ அதை நிறைவேற்றுவதற்கு வாய்ப்புகளை அள்ளிக் கொடுப்பான். ஆனால், ஓர் ஆவிக்குரிய வாலிபன் பிசாசுக்கு எதிர்த்து நிற்கிறான், அப்பொழுது பிசாசு ஓடிப்போவான் (யாக்கோபு 4 : 7) .

நாம் வேதாகமத்தில் பார்க்கும்போது இவ்வுலகில் நாம் செய்யும் செயல் களுக்காக நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டும் என்கிற உண்மையை விட தெளிவாக எந்த ஓர் உண்மை யையும் போதிக்கப்படவில்லை ( 2 கொரிந்தியர் 5 : 10 ). ஏனென்றால்,

சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும். ஆனால், இன்று அநேகர் வாழ்கின்ற வாழ்க்கையைப் பார்த்தால் நியாயத்தீர்ப்பு என்று ஒன்று இல்லை, நாம் யாருக்கும் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்கிற ஒரு முடிவுக்கு வந்துவிட்டது போல் தெரிகிறது. பிரசங்கி 11 : 9 – ல் சாலொமோன் ஞானி சொல்லும் போது, **வாலிபனே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும், உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவை எல்லாவற்றின் நிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்று அறி** எனக் கூறுகிறார். இவ்வுலகில் எத்தனையோ நிகழ்வுகள் இருந்தாலும் நியாயத்தீர்ப்பு நாளைப் போல பயங்கரமான நாள் ஒன்றுமில்லை. அந்த நாளை மனதில் கொண்டவர்களாய் நாம் அந்த உலகத்தில் வாழும் போது, தீமையை விட்டு விலகி கர்த்தருக்குப் பிரியமான காரியங்களைச் செய்வோம். அப்போது நாம் அந்த நாளைக் குறித்து பயப்படாமல் சந்தோஷமான அந்த நாளுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருப்போம். நாம் அந்த நாளைக் குறித்து பயப்படா மல் சந்தோஷமான அந்த நாளுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருப்போம். நாம் வாழும் இந்த உலகமானது நம்முடைய நித்தியத்தை எங்கே கழிப்பது என்று தீர்மானித்துக் கொள்ள வேண்டும். நியாயத்தீர்ப்பு நாளிலே நமக்கு இரண்டாவது வாய்ப்பு கொடுக்கப்படமாட்டாது. இப்போது வேதாகமத்திலிருந்து நாம் எதையாவது செய்யத் தவறினால் நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு முன்பாக நின்று பதில் அளிக்க வேண்டும் என்று வேத வசனங்களின் துணை கொண்டு பார்ப்போம்.

### I. தேவனுடைய வசனங்களை அறியாதிருந்தால்

ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ள தேவனுடைய வார்த்தைகளை நாம் கற்றுக்கொள்ளத் தவறினால் நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு முன்பாக நம் பதில் என்னவாயிருக்கும்? வேதாகமம் மனிதனுக்கு தேவனுடைய வெளிப்பாடாகும். வேதாகமம் தெய்வீக இரட்சிப்பின் திட்டத்தை வெளிப்படுத்துகிறது ( எபேசியர் 3 : 1 – 3 ). நீங்கள் தேவனுடைய சத்தியத்தை அறியாமலேயே மரித்து நித்தியமாக இரட்சிக்கப்பட முடியாது. சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்று இயேசு சொன்னார் (யோவான் 8 : 32). அந்தக் கடைசி மகா பெரிய நாளில் தேவனுடைய வசனமே நம்மை நியாயந்தீர்க்கும் ( யோவான் 12 : 48 ). நம்முடைய நாட்களில் வேத வசனங்கள் பத்திரிக்கை, தொலைக் காட்சி, வானொலி, இணையதளம் மூலமாக பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. எனவே,

நாங்கள் வேதவசனங்களைக் கேட்டதே இல்லை என்று யாரும் சாக்குப்போக்குச் சொல்ல முடியாது. அப்படியே, வேத வசனங்களைக் கேட்டிரா விட்டாலும், தேவனுடைய சிருஷ்டிப்புகளைப் பார்த்து இவைகளையெல்லாம் வடிவமைத்தவர், உருவாக்கியவர் ஒருவர் இருக்கிறார் என்று அவர்கள் முடிவுக்கு வர வேண்டும். அவர்களுக்கும் போக்குச் சொல்ல இடமில்லை.

நம்மை நாம் தேவனுக்கு முன்பாக உத்தமர்களாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிருக்க வேத வசனங்களைப் படிக்க வேண்டும். (2 தீமோ. 2 : 15) அதைப் போல் நாம் கள்ளப் போதகர்களால் வஞ்சிக்கப்பட்டால், தவறாக நடத்தப்பட்டால், நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு முன்பாக நம் பதில் என்னவாயிருக்கும்? நாம் கள்ளப்போதகர்களால் வஞ்சிக்கப்படுவதைக் குறித்து இயேசு எச்சரித்தார் ( மத்தேயு 7 : 15 - 20 ) . மேலும், இயேசு குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே என்றும் எச்சரித்தார் (மத்தேயு 15 : 14).

அன்பின் அப்போஸ்தலனாகிய யோவான் தன்னுடைய வாசகர்களுக்கு எழுதும் போது, பிரியமானவர்களே உலகத்தில் அநேகங் கள்ளத் தீர்க்க தரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல்,அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள் (1 யோவான் 4 : 1) என்று எழுதினார்.

### II கிறிஸ்துவுக்குள் இல்லாதிருந்தால்

சத்தியத்திற்குக் கீழ்ப்படிய வாய்ப்புக்கு மேல் வாய்ப்பிருந்தும் அதைத் தள்ளி கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கும்போது நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு முன்பாக நம்முடைய பதில் என்னவாயிருக்கும்? (ரோமர் 2 : 8, 9) (எபிரெயர் 2 : 1 - 3). கிறிஸ்துவுக்குள்ளாக இருப்பது மிக முக்கியம். ஒரு மனிதன் பெரிய வீட்டுக்குள் இருப்பது, அதிக ஆஸ்திகளுடன் இருப்பது, பெரிய அலுவலகத்தில் இருப்பது எல்லாம் இரட்சிப்புக்கும், நித்திய ஜீவனுக்கும் உதவாது. ஆனால், ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருப்பதுதான் மிக முக்கியம். ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் தான் கிறஸ்துவும் அவனுக்குள் இருப்பார். அதுமாத்திரமல்ல, கிறிஸ்துவுக்குள் தான் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் இருக்கின்றன. (எபேசியர் 1 : 3).

சரி, நாம் கிறிஸ்துவுக்குள் இருக்க என்ன செய்ய வேண்டும்? கிறிஸ்துவுக்குள் எப்படி இருப்பது என்பது பற்றி புதிய ஏற்பாட்டில் மிகவும் தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது. ( ரோமர் 6 : 3, 4 ) வசனங்களை வாசியுங்கள். கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும்

அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும், பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்.

மேற்கூறப்பட்ட வசனத்தில் நாம் பார்த்தபடி ஒருவன் ஞானஸ்நானத்தினாலே தான் கிறிஸ்துவுக்குள் இருக்க முடியும்.

புதிய ஏற்பாட்டில் ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருப்பதற்கும், இரட்சிப்படைவதற்கும், இதைத் தவிர வேறு வழிகள் வெளிப்படுத்தப்படவில்லை. நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கும் போது கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுகிறோம். நாம் எல்லோரும் கிறிஸ்துவின் குணாதிசயங்களைப் பெற்றிருந்தால் உலகத்தில் சண்டைகளோ, சச்சரவுகளோ இருக்காது. இந்த உலகம் ஒரு வித்தியாசமான உலகமாக இருக்கும். நாம் 2 கொரிந்தியர் 5 : 17 – ல் வாசிக்கும்போது " ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான் ; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின " என்று வாசிக்கிறோம். பிரியமான வாலிப உள்ளங்களே, இதுவரை நாம் இந்த உலகப்பிரகாரமான காரியங்களில் நம்மை மூழ்கடித்திருந்தாலும் பரவாயில்லை. இனிமேல் நாம் கிறிஸ்துவுக்குள் இருந்து ஒரு புதிய ஏற்பாட்டு மனிதனாக வாழ்ந்து, அநேகரை நீதிக்குட்படுத்தி நட்சத்திரங்களைப் போல் பிரகாசிப்போம். தேவன் தாமே அதற்கு உதவிச் செய்பவராக ஆமென்!

---

## ஒரு கிறிஸ்தவன் எவைகளைச் செய்ய வேண்டும்?

- புதிதான ஜீவனுள்ளவனாய் நடக்க வேண்டும் (ரோமர் 6 : 3, 4).
- திருவசனத்தின் மீது வாஞ்சையாயிருக்க வேண்டும் (I பேதுரு 2 : 3 )
- மேலானவைகளை நாட வேண்டும் (கொலோ 3 : 1, 2 )
- மற்றவர்களிடத்தில் கிறிஸ்துவைப் பற்றி சொல்ல வேண்டும் ( II தீமோத் 2 : 2 )
- கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வளர வேண்டும் (II பேதுரு 3 : 18 )

சிறுவர் பகுதி

# நீங்கள் எந்த நிலம்?

Bro. ஏபில் நாயகம்

எனக்குப் பிரியமான சிறு தம்பி, தங்கைகளே, உங்கள் யாவருக்கும் இயேசுவில் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். காலாண்டு விடுமுறை நாட்களை சந்தோஷமாக கழித்தீர்களா? கழித்திருப்பீர்கள் என நம்புகிறேன். பிள்ளைகளே! மாதந்தோறும் வெளிவரும் காரியங்கள் உங்களுக்கு நன்மையாக இருக்கிறது என்று நம்புகிறேன். இச்சிறு வயதிலிருந்தே தேவனுக்கு பிரியமாக நாம் வாழவேண்டுவது அவசியமாய் இருக்கிறது. அது நமக்கு ஆசீர்வாதமாகவும் இருக்கிறது. சரி, இந்த மாதம் நாம் இயேசுவின் உவமைகள் ஒன்றை தெரிந்து கொண்டு, அதிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்வோம். சரியா?

பிள்ளைகளே, மத் 13 -ம் அதிகாரத்தில் விதைக்கிறவன் ஒருவனைப் பற்றிய உவமையை இயேசுகிறிஸ்து கூறினார். அந்த உவமையில் விதைக்கிறவன் ஒருவன் விதைகளை எடுத்துக்கொண்டு விதைக்கப் புறப்பட்டான். அதில் சில விதைகள் " **வழியருகே** " விழுந்தன ; சில விதைகள் '' **கற்பாறை** '' இடங்களில் விழுந்தன ; சில விதைகள் '' **முள்ளுள்ள** '' இடங்களில் விழுந்தன ; சில விதைகள் " **நல்ல நிலத்தில்** " விழுந்தன.

வழியருகே விழுந்த விதைகளைப் பறவைகள் உட்கொண்டு விட்டன. கற்பாறை இடங்களில் விழுந்த விதைகள் வேரில்லாமல் முளைத்ததினால் பட்டுப்போய் விட்டது. முள்ளுள்ள இடங்களில் விழுந்த விதைகள் முளைத்தபோது அதைச் சுற்றி இருந்த முட்செடிகள் அவைகளை நெருக்கி வளரவிடாமல் செய்தது. ஆனால், நல்ல நிலத்தில் விழுந்த விதைகளோ, சிலது நூறாகவும், சிலது அறுபதாகவும், சிலது முப்பதாகவும் பலன் தந்தது.

பிள்ளைகளே, இந்த மாதம் நாம் கற்றுக் கொள்ளப்போகும் பாடம், நீங்கள் எப்படிப்பட்ட நிலமாக இருக்கிறீர்கள் என்பதுபற்றித் தான். ஆம், விதை என்பது தேவனுடைய வசனம். நம் பெற்றோர்கள் மூலமாகவும்,

ஞாயிறு வகுப்புகளிலும் நமக்கு அவை கற்றுக் கொடுக்கப்படும். தேவனுடைய காரியங்கள் அனைத்தையும் நாம் " விதை " என்று வைத்துக் கொள்வோம். அப்படியானால் நீங்கள் எந்த நிலமாக இருக்கிறீர்கள்? கேட்டும் செவிகொடாமல் இருக்கிற வழியருகில், கற்பாறைகளில், முள்செடியின் நடுவில் உள்ள நிலத்தைப் போல் உங்கள் இருதயமும் இருக்கிறதா? அல்லது கேட்ட காரியங்களை கற்றுக்கொண்டு அதற்கேற்றபடி நடக்கும் நல்ல நிலமாக உள்ளீர்களா?

பிள்ளைகளே! நாம் நல்ல நிலமாக இருக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். நமக்குச் சொல்லப்படும் தேவ காரியங்கள் அனைத்தையும் பிஞ்சு மனதில் கேட்டு, உங்கள் செழிப்பான இருதயத்தில் அதை விதைத்து, அதற்கேற்றபடி நடந்துகொள்ள நாம் தினந்தோறும் முயற்சி எடுக்க வேண்டும். அப்பொழுது நம் தேவன் நம்மீது அதிக பிரியமாக இருப்பார். நம்மை ஆசீர்வதித்து வழி நடத்துவார். அப்படிச் செய்வோமா?

●

---

# நாளும் நடப்பும்

- நவம்பர் 16 முதல் நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொடர்.
- ஐ.நா. பொதுச் செயலராக திரு. **குட்டெரெஸ்** நியமானம்.
- காவிரி மேலாண்மை வாரியத்தை மத்திய அரசு அமைக்கலாம் - மூத்த பொறியாளர்கள்
- பொருளாதார சீர்திருத்தங்களால்தான் நெருக்கடியிலிருந்து தாக்குப் பிடித்துள்ளோம் - நிதி அமைச்சர்
- நியூசிலாந்துக்கு எதிரான கிரிக்கெட் டெஸ்ட் தொடரை இந்தியா 3 - 0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

# தேவனைப் பற்றி பவுலின் கம்பீரமான விவரிப்பு

Bro. Byron Nichols

**ப**லருக்குப் பிடித்தமான வேதவசனப்பகுதி அப்போஸ்தலனாகிய பவுல் தேவனைப் பற்றி விவரிப்பதற்கு எடுத்துக்கொண்ட வேதவசனப்பகுதிதான். இவ்வார்த்தைகள் எல்லாம் நம் வேதாகமத்தின் ஒரு பகுதியாயிருப்பதால் நாம் உண்மையாகவே ஆசீர்வதிக்கப்பட்வர்கள்தான். ரோமர் 11 : 33 - 36 வசனங்களில் பவுல் தேவனைப்பற்றிய அந்த அழகான சித்திரத்தைத் தீட்டுகிறார்.

" ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்பட முடியாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்! கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவருக்கு ஆலோசனைக் காரனாயிருந்தவன் யார்? தனக்குப் பதில் கிடைக்கும்படிக்கு முந்தி அவருக்கு ஒன்றைக் கொடுத்தவன் யார்? சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்.

தேவ ஆவியினால் ஏவப்பட்ட வார்த்தைகளில் மிகவும் அழகான மற்றும் கெம்பீரமான வேத வசனப்பகுதிகளில் ஒன்றாகிய இவ்வசனப் பகுதியை நாம் சிறப்பாகப் புரிந்து கொள்ள முயற்சிப்போம்.

தேவனுடைய குமாரனையும் அவருடைய சபையையும் துன்பப் படுத்திய பவுலை மீட்ட தேவனைப் புகழ்ந்து அவர் துதிப்பாடும் இவ்வசனப் பகுதி நமக்காக பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிறபடியால் நாம் சிலாக்கியம் பெற்றிருக்கிறோம்.

**வசனம் 33.** இவ்வசனத்தில் பவுல் தேவனுடைய ஞானம், அறிவு போன்றவைகளிடத்தில் நம் கவனத்தைத் திருப்புகிறார். தேவனுடைய சிந் தையை நம்மால் புரிந்து கொள்வதற்கு வழியே இல்லையென்றும், தேவஞானம் மனிதப் புரிந்து கொள்ளுதலுக்கு அப்பாற்பட்டதென்றும் இவ் வசனத்தில் பவுல் ஒப்புக்கொள்கிறார்.

பவுலின் வார்த்தைகள் நீதிமொழிகள் 21 : 30 வசனத்தோடு முற்றிலும் ஒத்துப்போகிறது. அவ்வசனம் '' கர்த்தருக்கு விரோதமான ஞானமுமில்லை, புத்தியுமில்லை. ஆலோசனையுமில்லை என்று சொல்கிறது. I கொரிந்தியர் 1 : 20 ல் பவுல், " ஞானி எங்கே? வேதபாரகன் எங்கே? இப்பிரபஞ்சத் தர்க்க சாஸ்திரி எங்கே? இவ்வுலகத்தின் ஞானத்தை தேவன் பைத்தியமாக்க வில்லையா? என்று கேள்வி கேட்கிறார். இந்த மாபெரும் அப்போஸ்தலன் ரோமர்களும், ஒட்டுமொத்த உலகமும் தேவனுடைய மகத்துவத்தையும், மேன்மையையும் உணர்ந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார். அதுபோல், மனிதனால் புரிந்துகொள்ள முடியாத காரியங்களில் மனிதன் தேவனை கேள்விகேட்பது எவ்வளவு முட்டாள்தனமானது என்பதை உணர வேண்டுமென்றும் விரும்புகிறார்.

**வசனம் 34.** தேவன் எந்த அளவுக்கு தம்முடைய சிந்தையை மனிதனுக்கு வெளிப்படுத்தியிருக்கிறாரோ அந்த அளவுக்குத்தான் மனிதன் தேவனுடைய சிந்தையை அறிந்து கொள்ள முடியும். நாம் ஏற்கனவே பார்த்தபடி தேவனுடைய ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள் அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள். தேவனைக் கேள்விகேட்பதோ அவருடைய சிந்தையை மனிதனுடைய சிந்தையோடு ஒப்பிடுவதோ முட்டாள்தனமான காரியமாகும். ஏனென்றால், மனிதனை தேவனோடு ஒருபோதும் ஒப்பிடவே முடியாது. பல நேரங்களில் தேவன் செயல்படுகிற விதத்தைக் குறித்து நாம் ஆச்சரியப்படுகிறோம். அதன் காரணகாரியங்களை நம்மால் கொஞ்சம் அறிந்து கொள்ள முடிகிறது என்பதைக் குறித்து நாம் ஒருபோதும் பெருமை கொள்ள வேண்டாம். ஏனென்றால் தேவன் செயல்படும் விதத்தை நம்மால் மிகக் குறைவாகவே அறிந்து கொள்ள முடியும்.

நம் தேவனைப் பற்றியும், அவருடைய வழிகளைப்பற்றியும் புரிந்துகொள்ள முயற்சிப்பது கிட்டத்தட்ட ஒரு போராட்டமாகிறது. இன்றைய மனிதனுடைய அறிவு பழங்கால மனுதனுடைய அறிவைவிட மேலானது என்பதை நாம் அறிந்திருக்கிறபடியால் நம்மைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணிவிடுகிறோம் (ரோமர் 12 : 3) சில மனிதர்கள் தங்களை அதிபுத்திசாலிகளாக நினைத்துக் கொண்டு தங்களை தேவனோடு ஒப்பிடத் துணிகிறார்கள்.

**வசனம் 35.** யோபுவுடனான உரையாடலின்போது தேவன், "தனக்குப் பதில் கொடுக்கப்படும்படி, முந்தி எனக்குக் கொடுத்தவன் யார்?

வானத்தின் கீழுள்ளவைகள் எல்லாம் என்னுடையவைகள் (யோபு 41 : 11) . நாம் இவ்வுலகின் செல்வந்தர்களுடைய செல்வத்தின் அளவைப் பார்த்து பிரம்மிப்படைகிறோம். ஆனாலும், தேவனுடைய செல்வத்தின் அளவோடு நாம் ஒப்பிடும்போது, அவர்கள் பிச்சைக்காரர்களாகவே இருக்கிறார்கள். இம்முழு உலகமும் தேவனுடையது ( ஆதியாகமம் 1 : 1 ; யோவான் 1 ;3 ) செல்வந்தர்களிடம் காணப்படும் செல்வமெல்லாம் தேவனுடையது!

நம்மிடத்தில் கொடுப்பதற்கு ஒன்றுமே இல்லை. நாம் ஒன்றைக் கொடுத்து தேவன் அதை மறுபடியும் கொடுக்க வேண்டிய நிலையில் தேவன் இல்லை. ரோமர் 12 : 1 ல் நம் சரீரங்களை தேவனுக்கு ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று தேவன் வலியுறுத்துவது உண்மைதான், ஆனால், நாம் அப்படி நம் சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தாலும் அவர் நமக்கு ஏதோ ஒரு நன்மையைச் செய்ய கடன்பட்டிருக்கிறார் என்று பொருள்படாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதே போல் அவர் நமக்கு இரட்சிப்பை நல்க கடன்படவில்லை, அது எப்போதுமே அவரு டைய தெய்வீக கிருபை மூலமாக நமக்கு ஈவாகவே அளிக்கப்படுகிற து. நாம் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும், அவருக்கு சேவை செய்ய வேண்டும் ஆனால், அவர் நமக்கு எதையும் திருப்பிச் செய்ய வேண்டியதில்லை.

**வசனம் 36. சகலமும் அவராலும் அவர் மூலமாகவும் அவருக்காகவும் இருக்கிறது. அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக ஆமென்**

பவுல் இவ்வசனத்தை தேவனைப் பற்றிய தன் அழகான துதிபாடலின் சுருக்கமாகப் பயன்படுத்துகிறார். நாமும் பவுலைப் போலவே,

**தேவனுடைய மேன்மையையும், மகத்துவத்தையும் உணர்ந்து தேவன் மாத்திரமே நம் நித்திய போற்றுதலுக்கும், துதிக்கும் பாத்திரர் என்பதை இணைந்து உறுதி செய்வோம்.**

---

## நான்கு பேர் ஐசுவரியமடைவதில்லை

**( நீதிமொழிகள் 23 : 20, 21 )**

- மதுபானப் பிரியன்
- மாம்சப் பெருந்தீனிக்காரன்
- நித்திரைப் பிரியர்
- சிற்றின்பப் பிரியர்

# நம்மால் காண முடிந்தால்

Bro. Mike Ireland

" அவரைச் சிலுவையில் அறைந்தபோது மூன்றாம் மணி வேளையா யிருந்தது ( மாற்கு 15 : 25 ) இயேசு கிறிஸ்து வெள்ளிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு சிலுவையில் அறையப்பட்டார். " இந்த ஒட்டு மொத்த சம்பவமும் நடந்ததே அதிகநேரம் பிடித்திருக்கிறது. இயேசுவை சிலுவை யிலறந்தவர்கள் சிலுவையில் அறைவதில் கை தேர்ந்தவர்கள். அவர்கள் இந்த செயல்முறையில் கைதேர்ந்தவர்கள். அவர்களுக்கு பலரை சிலுவையில் அறைந்த அனுபவம் உண்டு. அந்த போர்ச் சேவகர்கள் அவரு டைய வஸ்திரங்களைப் பங்கிட்டு ஒவ்வொருவன் ஒவ்வொரு பங்கை எடுத்துக் கொள்ளும்படி அவைகளைக் குறித்து சீட்டுப் போட்டார்கள். அதற்கு அப்பால், அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் உட்கார்ந்து, ஆக்கி னைக்குட்படுத்தப்பட்ட மனிதன் மரிப்பதை காத்திருந்து பார்ப்பதுதான்.

அந்நேரத்தில் அவர்களால் நம்பமுடியாத காரியம் நடைபெற விருந்தது. ஆனால், கொல்கொதா மலையில் இருந்தவர்களுக்கு அதைப் பற்றி எதுவும் தெரியாமலிருந்தது ரோமர்களுக்கும் இந்த சம்பவத்தைக் குறித்து எந்த அறிவும் இல்லாமல் இருந்தது. உலகத்தை மாற்றப் போகும் இச்சம்பவத்தில் அவர்கள் என்ன பங்கு வகிக்கப் போகிறார்கள் என்பதைக் குறித்து எந்த அறிவும் அவர்களுக்கு இருக்கவில்லை. தேவன் தன்ன லமற்ற நிலையில் இப்பூமியில் மனிதனாக அவதரிப்பதைக் குறித்து அவர் களால் கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை. அதுபோல் தங்களுக்கு ஓர் இரட்சகர் தேவை என்பதைப் பற்றிய விழிப்புணர்வு கூட இல்லை. எனவே, அவர்கள் எதைச் செய்தார்களோ, அதை அறியாமையில் செய்தார்கள். எனவேதான், இயேசு கிறிஸ்து அவர்களுக்காக ஜெபித்தார்.

யூதர்கள்கூட இக்காரியத்தில் குழப்பமான சூழ்நிலையில் தான் இருந்தார்கள். அவர்கள் அப்படி குழம்ப வேண்டிய தேவை இல்லை. வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும் வாய்ப்பு அவர்களுக்கு இருந்த போதிலும், இயேசுவைப் பற்றிய ஏராளமான தீர்க்கதரிசனங்கள் பழைய ஏற்பாட்டில் இடம் பெற்றிருந்தபோதிலும் அவரைப் பற்றி குழப்பமான பார்வைதான் அவர்கள் மத்தியில் காணப்பட்டது.

தேவன் மனிதராவார் என்பதையும், மேசியா பாடுபடும் தாசனாக இருப்பார் என்பதையும் அவர்களால் கற்பனை கூட செய்து பார்க்க முடிய வில்லை. அவர்கள் வேறுவிதமான மேசியாவை எதிர்பார்த்தார்கள். அவர்கள் என்ன செய்தார்களோ, அதை அவர்கள் அறியாமையில் செய்தார்கள். எனவே, இயேசு கிறிஸ்து அவர்களுக்காக ஜெபித்தார். இங்கே ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், இயேசு தம்மை சிலுவையில் அறைந்தவர்களுடைய மன்னிப்புக்காக விண்ணப்பம் பண்ணுகிறார். ஆனால், அவர்களோ இயேசுவினுடைய வஸ்திரங்களைப் பங்கு போடு வதில் குறியாக இருந்தார்கள். இங்கே இயேசுவுக்கும் அவர்களுக்குமுள்ள வித்தியாசத்தைப் பாருங்கள். அவரோ அவர்களுக்காக ஜெபித்துக் கொண்டிருந்தார் ; அவர்களோ சீட்டு போட்டுக் கொண்டிருந்தார்கள்.

இதைக் குறித்து நாமும் வெட்கப்பட வேண்டும். ஏனென்றால், நாமும் அவர்களைப்போல் தான் இருக்கிறோம்! உண்மையான மதிப்பை உடைய காரியங்களின் மீது நம் கண்களைப் பதித்த வாழ்க்கையை பெரும்பாலான நேரங்களில் நாம் வாழுகிறோம். அதேபோல் தேவனுடைய நித்திய ஆசீர் வாதங்களை சுதந்தரித்துக்கொள்ளும்படி உண்டாக்கப்பட்டிருக்கிற நாம் இவ்வுலகில் நிரந்தரமில்லாத காரியங்களின் பின்னே செல்கிறோம். அவரைப் போலிருக்கும்படி தேவனால் உண்டாக்கப்பட்டிருக்கும் நாம் தரம் தாழ்த்தி முக்கியமற்ற காரியங்களுக்காக உளையான சேற்றில் சிக்கித் தவிக்கிறோம். நாம் அற்பமான காரியங்களின் மீது சிந்தை வைத்து தேவன் நம்மைச் சுற்றிலும் என்ன செய்து கொண்டிருக்கிறாரோ அவைகளைத் தவற விடுகிறோம்.

இந்தப் போர்ச்சேவர்களெல்லாம் இப்பூமியில் வாழ்ந்த மிகப் பெரிய மனிதனிடமிருந்து ஒரு சில அடி தூரத்தில்தான் இருந்தார்கள். ஆனால், அவர்களுடைய சிந்தையெல்லாம் அவர் அணிந்திருந்த வஸ்திரங்கள் மீது தான் இருந்தது. உலகம் இரட்சிக்கப்பட்ட அவ்வேளையில் அவர்கள் சீட்டு போட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இயேசுவை காணவேண்டிய அளவுக்கு காணவில்லை. நாம் அவரை நன்றாக அறிந்திருந்தாலும் கூட போர்ச்சேவகர்கள் செய்த அதே தவறை செய்வதற்கு வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. பரபரப்பான வாழ்க்கை முறை, கவனக்குறைவு, தடங்கல்கள், கலாச்சார ஈடுபாடுகள் போன்றவைகள் கிறிஸ்துவின் மீதான நம் சிந்தையை சிதைத்து விடுகின்றன.

நாமெல்லாரும் செய்யும் மாபெரும் தவறு, **எது முக்கியமானது** என்பதை, தவற விடுவதுதான்.

# உம்முடைய வசனமே சத்தியம்

Bro. Hugo MC Lord

**யோ**வான் 14 : 6 ல் இயேசு கிறிஸ்து தம்மைப் பற்றி சொல்லும்போது " சத்தியம் " என்று சொல்கிறார். ஆனால் யோவான் 17 : 17 ல் அன்பின் மொத்த உருவமான இயேசு கிறிஸ்து உம்முடைய வசனமே சத்தியம் என்று சொல்கிறார். பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் சத்திய வசனத்தால் நிறைந்திருக்கின்றன. (சங்கீதம் 119 : 43 ; II கொரிந்தியர் 6, 7 ; எபேசியர் 1 : 13 ; கொலோ 1 : 5 II தீமோத்தேயு 2 : 15 ; யாக்கோபு 1 : 18) தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும் இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. தேவனுடைய வார்த்தைகள் கீழ்க்காணும் காரியங்களை செய்ய வல்லமையுள்ளது.

1. **நம் இருதயங்களில் விசுவாசத்தை உண்டாக்குகிறது** : " ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும். (ரோமர் 10 : 17)
2. **நம்மை பரிசுத்தமாக்குகிறது**. " உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப்பரிசுத்தமாக்கும் உம்முடைய வசனமே சத்தியம் " (யோவான் 17 : 17)
3. **நம் ஆத்துமாக்களை உயிர்ப்பிக்கிறது** : " கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது ; கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது " (சங்கீதம் 19 : 7).
4. **நம் ஆத்துமாக்களை இரட்சிக்கிறது** : " உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள் (யாக்கோபு 1 : 21)
5. **மறுபிறப்புக்கு காரணமாகிறது** : " அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெபித்தார் " (யாக்கோபு 1 : 18)

6. **புதிதாய்ப் பிறந்தவர்கள் வளரக்காரணமாகிறது** : நீங்கள் வளரும்படி புதிதாய் பிறந்த குழந்தைகளைப்போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள் (Iபேதுரு 2:2).

7. **நமக்குள் நிலைத்திருக்கிறது** : " நீங்கள் பலவான்களாயிருக்கிற தினாலும், தேவவசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும், நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்ததினாலும் உங்களுக்கு எழுதியிருக் கிறேன் " (I யோவான் 2:14).

8. **நமக்குள் கிரியை செய்கிறது** : " அது மெய்யாகவே தேவ வசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது " (I தெச. 2 :13)

9. **நம்மை வழி நடத்துகிறது** : " உமது வெளிச்சத்தையும் உமது சத்தியத்தையும் அனுப்பியருளும் ; அவைகள் என்னை நடத்தி... (சங்கீதம் 43:3)

10. **நம்மை பாவஞ்செய்யாதபடிக்குத் தடுக்கிறது** : " நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன் " .

11. **நம்மைச் சுத்தமாக்குகிறது** : வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்ளுகிறதினால் தானே " (சங்கீதம் 119:9)

12. **நம்மை ஞானியாக்குகிறது** : " கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது " சங்கீதம் (19:7)

13. **நம்மை உணர்வடையச் செய்கிறது** : " உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன் " (சங்கீதம் 119:105)

14. **நம்மை ஆறுதல்படுத்துகிறது** : " அதுவே , என் சிறுமையில் எனக்கு ஆறுதல் ". (சங்கீதம் 119:50)

15. **நம்மை போஷிக்கிறது** : " மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே " (மத்தேயு 4:4).

16. **நமக்கு பயத்தை ஏற்படுத்துகிறது** : " உமக்குப் பயப்படுகிறதற்கு உமது வாக்கை உமது அடியேனுக்கு உறுதிப்படுத்தும் " (சங்கீதம் 119:38)

17. **நமக்கு ஆலோசனைக் கொடுக்கிறது** : " உம்முடைய சாட்சிகள் எனக்கு இன்பமும் என் ஆலோசனைக்காரருமாயிருக்கிறது " (சங்கீதம்119:24)

18. **நம்மை எச்சரிக்கிறது** : " அன்றியும் அவைகளில் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன் " (சங்கீதம் 19 : 11)

19. **நம்மை எழுதப்பட வார்த்தைகளுக்கு கட்டுப்படுத்துகிறது** : " சகோதரனே எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணவேண்டாமென்று நீங்கள் எங்களாலே கற்றுக்கொள்ளவும், ஒருவனும் ஒருவனிமித்தம் மற்றொருவனுக்கு விரோதமாய் இறுமாப்படையாதிருக்கவும் திருஷ் டாந்தமாக வைத்து இவைகளை எழுதினேன். (I கொரிந்தியர் 4 : 6)

20. **நமக்கு அறிவைத் தருகிறது** : உம்முடைய சாட்சிகள் என் தியானமா யிருக்கிறபடியால் எனக்குப் போதித்தவர்களெல்லாகிலும் அறிவுள்ள வனாயிருக்கிறேன் " (சங்கீதம் 119 : 99)

21. **நம் துக்கத்தில் உதவுகிறது** : " உமது வேதம் என் மனமகிழ்ச்சியா யிராதிருந்தால் என் துக்கத்திலே அழிந்து போயிருப்பேன் ".( சங்கீதம் 119 : 92)

22. **நம் தேவைகளை சந்திக்கிறது** : " தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும், நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ் விய வல்லமையானது நமக்குத்தந்தருளினதுமன்றி " (II பேதுரு 1 : 3)

23. **நம்மை முற்றிலும் தகுதிப்படுத்துகிறது** : " வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது ; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனா கவும் இருக்கும்படியாக அவைகள் உபதேசத்துக்கும் கடிந்து கொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும் நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது " ( II தீமோத்தேயு 3 : 16 , 17)

24. **நமக்கு சமாதானத்தைத் தருகிறது** : " உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு " (சங்கீதம் 119 : 165)

25. **நம் இருதயங்களை சந்தோஷிப்பிக்கிறது** : " கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும் இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது " (சங்கீதம் 19 : 8)

26. **நம்மை துக்க வேளையிலே தேற்றுகிறது** : " ஆகையால் இந்த வார்த்தை களினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள். ( I தெச. 4 : 18)

27. **நமக்கு நம்பிக்கையை தருகிறது** : " நீர் என்னை நம்பப் பண்ணின வசனத்தை உமது அடியேனுக்காக நினைத்தருளும் " (சங்கீதம் 119 : 49).